முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1097

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.09.2022**, வெள்ளிக்கிழமை

1. பார்காக்க வந்த மாதவராஜனே
   பாமரர்க்கும் அருளும் குருராஜனே
   சீர்திருத்தம் செய்து கலியில்
   சித்திமிகு ஞான யுகமாக மாற்ற வந்த சிவராஜயோகியே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13 ம் நாள், 30.09.2022 வெள்ளிக்கிழமை)
   சிந்தைமிகு அரங்கன் திருவடி பற்றி
   ஜெகத்தோர் விந்தைபட அரங்கன் அறத்துள்
3. வந்துவிட்டால் வினையை வெல்வர்
   வாழுங்காலமே ஆறுமுகன் என்
   காட்சி பெற்று அழியாமை பெறுவர்
   என்பது உறுதி உறுதி
4. உறுதி கொண்டு அரங்கனுள் யானிருந்து
   உலகத்தை ஆள இருக்கின்றேன்
   கருதிவந்து அரங்கன் திருவடி பற்றி
   கலியில் சரணடைந்தால் போதும்
5. போதுமப்பா அவர்களெல்லாம் ஞானிகளாகி
   புண்ணியபலம் என்கின்ற மகா பாதுகாப்போடு
   பாதுகாப்புடன் இந்த உலகத்தில் ஞானவான்களாக
   பாருலகையே மாற்றவல்ல ஞானிகளாகவும் மாற்றங்கண்டு
6. மாற்றங்கண்டு அரங்கனால் சித்தி பெறுவர்
   மரணத்தை வென்று இந்த உலகில் ஞானிகளாவர்
   ஆகவே அரங்கனால் இந்த அற்புதத்தை
   அகிலத்தில் நடத்தி மாற்றம் செய்யவே
7. வரங்கள் தந்து ஆறுமுகன் யான்
   வல்லமை கூட்டி அரங்கனுள் இருக்கின்றேன்
   இருக்கின்ற இந்த இரகசியத்தை எவர் ஞானவழி அறிகின்றாரோ
   கருத்தாக அவர்களெல்லாம் கடைத்தேறி கலியினில் ஞானியாவது உறுதியப்பா
8. உறுதிகொண்டு அரங்கனோடு ஒன்றிணைந்து
   உயர் சேவையாற்றும் உண்மை சீடர்கள் அனைவருமே
   வருமுலகில் எந்தன் காட்சியோடு
   வல்லமைமிக்க ஞான சித்தி பெறுவது கலியில் உறுதிஉறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–